**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 03 - 2018**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 03 இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 3348 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 3349- எஸ்ஆர்ஜ-(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு ன்பவற்றுடன் சேர்த்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் 2.10 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம்- 3 இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேண் தன்மையை முன்னேற்றுவதே நிகழ்சித்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 29,642.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 228.02 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,990 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 123 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்ட அதேநேரம் ரூபா 650 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஆசிய அபிவிருத்தி நிதியத்தின் விசேட நிதி வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 7,742.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 59.56 மில்லியன் ஐரோப்பிய முதலீட்டு வங்கியால் (ஈஐடி) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,259.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40.46 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தில், ரூபா 7,231.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 55.63 மில்லியன் ஒதுக்கீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 22,410.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 172.39 மில்லியன் கொழும்பு மா நகர சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் மீதான அவதானிப்புக்களைக் கொண்டுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 நவம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

### 1.3 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

---

என்னுடைய அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு நிகழ்ச்சித்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு நிகழ்ச்சித்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| அ) | கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்ட ரூபா 81.17 மிலிலியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 501,992 கூட்டுத்தொகையான கடப்பாட்டு கட்டணங்கள் மற்றும் வட்டிகள் கொழும்பு மா நகர சபையால் அமுலாக்கப்பட்ட கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி II இலிருந்து பிரிக்கப்பட்டு கணக்குகளற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 81.17 | வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணங்களின் குறைத்தக் கூறல் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிப் பிரிவின் அறிவுறுத்தல்களிற்கு அமைய வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் புத்தகங்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் உரிய செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் கணக்குகளிற்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப் பட்டிருநதன. | மீளாய்வாண்டு இறுதியில் பயன்படுத்திய கடன் தொகையை காட்டுவதற்கு இயலக்கூடியவாறு கிரயங்கள் பிரிக்கப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர் நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் முறையே 36.25 சதவீதம் மற்றும் 8.41 சதவீத மெதுவான முன்னேறறத்தை காட்டியிருந்த போதிலும், | கடன் பெறுகைகளின் ஒதுக்கீட்டின் குறைவான | கருத்து தெரிவிக்கப்படவில்லை | வெளிநாட்டு நிதிகளின் உண்மையான தேவை மற்றும் அவற்றின் மீதான கைதவிப்பு திட்டம் தயாரித்தல் என்பவற்றிற்காக |

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 01 மற்றும் 02 இன் முன்னைய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழான புனரமைப்பு மற்றும் விரிவாக்கல் வேலைகளிற்கான நிதி இடைவெளிகளை நிரப்புவதற்கு மேலதிக நிதியளிப்பு ஒழுங்குகள் ஊடாக மேலதிக நிதிகள் ஒதுக்குவதற்கு 2016 இல் வேண்டுகை செய்ய்பபட்டது. எவ்வாறாயினும், சொல்லப்பட்ட செயற்திட்டங்களால் அமுலாக்கப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம் 2018 திசெம்பர் 31 வரையும் இலக்கினை விட பின்தங்கியிருந்ததுடன் இதன்விளைவால், மேலதிக நிதி ஒழுங்குகளின் கீழ் செய்யப்பட்ட ரூபா 4,550 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 35 மில்லியன் ஒதுக்கீடு குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பயன்பாடு மற்றும் அவற்றின் மீது கடப்பாட்டு கட்டணங்கள் ஏற்படும் சாத்தியம். | | நிர்ணயிப்பதற்கான தேவைகளை சிபார்சு |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டம் அதனுடைய நோக்கங்களை அடைவதற்காக காலரீதியாக விரிவான செயல்நடவடிக்கை திட்டம் தயாரித்திருக்கவில்லை என அவதானிக்கபபட்டது. எவ்வாறாயினும், ஆலோசனை சேவைகளிற்கான 04 ஒப்பந்தங்கள் மற்றும் 13 வேலை ஒப்பந்தங்கள் முறையே ரூபா 64 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 405,794 மற்றும் ரூபா | செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதில் மேலதிக கிரயம் | ஆலோசனை பொதிகள் கிடைக்கக்கூடிய காலத்திற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்குள் உள்ளக இயலளவு மற்றும் வசதிகள் என்பவற்றினை கவனத்திற்கொண்டு வெளித்தரப்பினருக்கு வழங்க | முன்னுரிமை அடிப்படையில் கவனத்திற்கொள்ள வேண்டுமென தேவைப்பட்ட உள்ளக வளங்களை பயன்படுத்துவதற்கான சாத்தியம் |

17.36 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 112,867 ஆன கிரயத்தில் மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித்திட்டத்தால் வழங்கப்பட்டிருந்தது. மேலும், ஆலோசனை சேவைக்கான உரிய ஒப்பந்தங்களை நாட்டிலுள்ள குழாய்வழி நீர் வழங்கல் மீது ஒரே சேவையை வழங்குகின்ற தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் தொடரபுடைய நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவத்தைக் கருத்திற்கொள்ளாமல் எதிர்காலத்தில் உப செயற்திட்டங்களின் இனங்காணல் மற்றும் தயார்படுத்தல் நோக்கங்களிற்காக நீரியல நவீனமயப்படுத்தல், நீர் உட்புகாத அச்சிடல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்பு என்பவற்றினை மேற்கொள்வதற்கு தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது.

தீர்மானிக்கப்பட்டது.